**அக்குரன பிரதேச சபை**

**கண்டி மாவட்டம்**

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 27 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 09 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான அக்குரன பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசுப் பாய்ச்சலும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

--------------------------------------

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருந்த பதிவேட்டில் காணிகளின் பெறுமதிகள் மற்றும் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த காணிகளின் பெறுமதியுடன் ஒப்பீடு செய்யும் போது 36 காணிகளின் பெறுமதியான ரூபா 1,613,668 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) ரூபா 1,500,000 ற்கான கிரயத்தையுடைய இலக்கம் 252 – 6527 கொண்ட கப் வண்டியினை 2013 ஆண்டின் போது ரூபா 3,133,447 தொகை செலவிடப்பட்டு திருத்த வேலை மேற் கொள்ளப்பட்டிருந்தது, அத்துடன் அதனது புதுப் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்து, மூலதனப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(இ) 2012 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதிகளின் அறிக்கையின் மூலம் அவதானிக்கப்பட்டிருந்த கணக்கீடு செய்யப்பட்டிருக்காத ரூபா 26,652 இற்கான நிலுவை நீர்க் கட்டணத்திற்காக மீளாய்வாண்டின் போதும், கணக்குகளில் சீராக்கல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.2 பெற வேண்டிய கணக்குகள் மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

-----------------------------------------------------------------------------------------------------

(அ) பெற வேண்டிய கணக்குகள்

-----------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களின் மூலம் சமர்பித்திருந்த பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 127,883,524 ஆகக் காணப்பட்டதுடன், அவற்றில் 06 வருமான விடயங்களில் 01 வருட காலத்தை மிகைத்துள்ள கணக்கு மீதிகளின் கூட்டு பெறுமதி ரூபா 3,696,445.40 ஆக காணப்பட்டது.

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

-----------------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 117,120,733 இற்கான செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி 01 வருட காலத்தை மிகைத்திருந்த கணக்கு விடயமொன்றின் பெறுமதி ரூபா 168,443 ஆகும். 2014 ஆகஸ்ட் 22 திகதியில் உள்ளவாறு மேலும் ரூபா 21,275 செலுத்த வேண்டியிருந்தது.

2 நிதி மீளாய்வு

--------------------

2.1 நிதி விளைவுகள்

-------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதிய முடிவடையும் ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞசிய வருமானம் ரூபா 17,441,899 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,076,356 ஆக காணப்பட்டமையால், நிதி விளைவுகளில் ரூபா 11,365,543 இற்கான முன்னேற்றம் ஒன்று காணப்பட்டது.

2.2 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

-------------------------------------------------------

மொத்த நடைமுறை சொத்துக்களுடன் நடைமுறை பொறுப்புக்கள் இடையே காணப்படும் விகிதாசாரம் 1.22 : 1 ஆக காணப்பட்டதுடன், முன்னைய ஆண்டின் போதான விகிதாசாரம் 1.19 : 1 ஆகும். இந்த விகிதாசாரம் உச்ச மட்டத்தில் காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டிருந்ததுடன், ஒட்டு மொத்த நடைமுறை சொத்துக்களில் நூற்றிற்கு 70 அதாவது ரூபா 107 மில்லியன் உள்ளூராட்சி உட்கட்டமைப்பு மேம்படுத்தும் செயற்திட்டத்தின் மூலம் (LGIIP) அறவிடப்பட வேண்டிய ஒரு தொகை ஆகக் காணப்பட்டதுடன், மொத்த நடைமுறை பொறுப்புகளில் நூற்றுக்கு 90 அதாவது ரூபா 106.7 மில்லியன் லங்கா டிரேடின் கன்ஸ்டிரக்ஷன் கம்பனிக்கு செலுத்த வேண்டிய தொகை அடங்கியுள்ளது.

2.3 வருமான நிருவாகம்

-----------------------------

(அ) வீதவரி

-----------

மீளாய்வாண்டு ஆரம்பித்த தினத்தில் உள்ளவாறு ரூபா 1,791,977 இற்கான நிலுவை ஒன்று காணப்பட்டது. அத்துடன் ஆண்டிற்கான பில் போடப்பட்டவற்றின் மூலம் அறவிடப்பட்ட தொகை ரூபா 4,514,513 ஆக காணப்பட்டமையால் அறவீடுகளின் சதவீதம் நூற்றிற்கு 68 ஆகியுள்ளது.

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 3,004,309 இற்கான மீதி தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158(1), 159(1) பிரிவுகளின் ஏற்பாடுகளை கடைபிடித்து 2014 ஜுன் 30 வரை நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(ஆ) வாடகை

------------

2013 திசெம்பர் 31 திகதி வரை 29 கடைகளில் இருந்த 06 மாதம் முதல் பத்து வருடங்கள் வரையான வீச்சில் ரூபா 551,142 இற்கான வாடகை அறவிடப்பட வேண்டியிருந்தது. நிலுவை வாடகை தொடர்பாக உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) செலுத்துகை டவர் கட்டணம்

------------------------------------------

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 04 தொலைபேசி செலுத்துகை டவர்களில் இருந்து மீளாய்வாண்டிற்கான வாணிப அனுமதிப்பத்திர கட்டணம் ரூபா 12,000 தொகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) அறிவித்தல் பலகை கட்டணம்

--------------------------------------------

நகரத்தில் அமைக்கப்பட்டிருந்த 08 நிலையான அறிவித்தல் பலகைகளின் மூலம் குறிப்பிட்ட நிறுவனங்களில் இருந்து ரூபா 202,300 இற்கான கட்டணத்தை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3 செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------

3.1 செயலாற்றுகை மதீப்பீடு

---------------------------------

வருடாந்த தொழிற்பாட்டு திட்டத்துடன் இணக்கங்களை உறுதிப்படுத்துவதற்காக பௌதிக மற்றும் நிதிசார் செயலாற்றுகையை எடுத்துக் காட்டக்கூடிய முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் நிருவாக அறிக்கைகள் என்பன தயாரித்திருக்கவில்லை.

3.2 ஒப்பந்த நிருவாகம்

--------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 திசெம்பர் 14 திகதி ரூபா 366,868 பெறுமதியான ஒப்பந்த வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த தொடங்கொல்ல குறுக்கு பாதையில் 02 இடங்களில் மொத்தம் 55 சதுர அடி அளவான இடத்தில் இணை தொடர்பு சீமெந்து கல் பதித்திருந்த பகுதி ஒன்று கீழிறங்கிய நிலையில் காணப்பட்டது.

(ஆ) சட்டரீதியாக சபைக்கு உரித்தாக்கப்படாமல் காணப்பட்ட தனியார் பாதை ஒன்றான புலுகஹதன்னை பெரிய பள்ளிவாசல் அண்மையிலிருந்து செல்லும் துணைப் பாதையை கொங்கிரீட் பண்ணுவதற்காக ரூபா 142,500 தொகை ஒன்று சபை நிதித்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது.

3.3 முறைசாரக் கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------

சபையின் வேலைகளுக்காக வாடகை அடிப்படையில் ஈடுபடுத்தியிருந்த இலக்க HC 6094 கொண்ட வாகனத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 115,000 தொகையொன்று வாடகையாகச் செலுத்தப்பட்டிருந்தது எனினும், அந்த வாகனம் சபையின் எந்த கருமங்களுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தன என உறுதிப்படுத்த முடியாதிருந்தது. அதே போல் வாகனத்தின் ஓட்ட அட்டவணையிலும் பிரயாண விபரங்களும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

3.4 பயன்படுத்தப்படாத மற்றும் குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்

------------------------------------------------------------------------------------------

அக்குரன நகர மத்தியில் அமைந்துள்ள சபைக்கு சொந்தமான பொது வர்த்தக தொடர் கட்டிடத்தில் 12 கடைகள் சுமார் 02 வருடங்களாக வாடகைக்கு கொடுப்பதற்கு அல்லது பயன்தரு வேலை ஒன்றில் ஈடுபடுத்தப்படாமல் மூடப்பட்ட நிலையில் காணப்பட்டது.

3.5 செயற்பாட்டுத் திறமையின்மை

-------------------------------------------

அலவதுகொட கெனகலகல மாவத்துபொல வில் அமைந்திருக்கும் சுது ஹகுருவத்த என அழைக்கப்படும் ஏல விற்பனையின் மூலம் விற்பனை செய்யப்படும் காணியில் இருந்து விற்பனை மீது அறவிடப்படும் வாடகை மற்றும் பொது வேலைக்காக சபைக்கு உரித்தாக்கப்பட வேண்டிய காணி பங்குகளை பெறுவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4 கணக்கு நடவடிக்கை தன்மையும் நல்லாட்சியும்

---------------------------------------------------------------------

4.1 கூட்டிணைப்புத் திட்டம்

---------------------------------

மிளாய்வாண்டின் போது சபையினால் கூட்டினைப்புத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

4.2 கொள்வனவுத் திட்டம்

--------------------------------

ரூபா 73,115,724 இற்கான மூலதன செலவுகள் சபையினால் மேற் கொள்ளப்பட்டிருந்தன. எனினும், மீளாய்வாண்டிற்கான கொள்வனவுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

4.3 தொழிற்பாட்டுத் திட்டம்

----------------------------------

சபையினால் மீளாய்வாண்டின் போது தொழிற்பாட்டு திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

4.4 அகக் கணக்காய்வு

-----------------------------

மீளாய்வாண்டின் போது சபையினால் போதியளவு அகக் கணக்காய்வு ஒன்று மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம், மதிப்பீட்டு வருமானம் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுடன் ஒப்பீடு செய்யும் போது 06 வருமான விடயங்களில் நூற்றிற்கு 15 முதல் நூற்றிற்கு 81 வரையும், 08 செலவு விடயங்களில் நூற்றிற்கு 23 முதல் நூற்றிற்கு 63 வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டதுடன், பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஆ) 05 வருமான தலைப்புகளை கொண்ட 09 துணை வருமான விடயங்களுக்காக பாதீட்டு தொகை ரூபா 1,839,250 இற்கான வருமான அறவீடுகளின் சதவீதம் நூற்றிற்கு 0 ஆகும.

5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) மனித வள முகாமைத்துவம்